# 17 மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்



யாழ்ப்பாண நகரத்தில் இருந்து காங்கேசன் துறை செல்லும் நெடுஞ்சாலையில் 15 கிலோ மீற்றர் தொலைவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் திசை உக்கிர சோழன் எனும் அரசன் சோழ நாட்டில் இருந்தான். அவரின் மகளான மாருதப் புரவீகவல்லி குதிரை முகமும் மானுட உடலும் கொண்டிருந்தாள். சாந்தலிங்கன் என்னும் முனிவரின் வழிகாட்டலின்படி கீரிமலைக்குச் சென்றாள். அங்கே தவம் புரிந்த நகுல முனியை வணங்கி அவர் ஆசியுடன் கீரிமலையில் தீர்த்தம் ஆடினாள். கோயிற் கடவைப் பிரதேசத்தில் எழுந்தருளியுள்ள கந்தசுவாமியாரை பலதடவை வணங்கி வந்தாள். நாளடைவில் குதிரை முகம் மனித முகமாக மாறியது.

மா - குதிரை

விட்ட - நீங்கிய

புரம் - இடம்

குதிரை முகம் நீங்கிய இடம் - மாவிட்டபுரம். இந்த ஆலயத்தின் தலவிருட்சம் - மாமரம்

தீர்த்தம் - கண்டசி தீர்த்தம்/அந்தர்வாவி ( கீரிமலைக்கடல்)







**மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் நீங்கலும் ஆலயம் அமைத்தலும்**

இவ்வாலய மகோற்சவம், பூர்வபக்ஷ சஷ்டித்திதியோடு கூடிய ஆனி உத்தரநாளன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி அமாவாசை அன்று தீர்த்தமும் அதற்கு முதல் நாள் தேருமாக 25 நாட்கள் நடைபெறும்.
இங்கு ஐந்து தேர்கள் வலம் வருகின்றன.



**சப்பறம்**



**தேர்**



**கண்டகி தீர்த்தம்**

இந்நாட்களில் திருநடனத்திருவிழா, வேட்டைத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, ஆறுமுகசுவாமி நடனத்திருவிழா,சப்பரத் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன சிறப்பாக நடைபெறும். ஆண்டு தோறும் கந்தபுராணப் படிப்பு வைகாசி மாதம் ஆரம்பமாகும்.
கந்தசஷ்டி பூசையும் இடம்பெறும் சுவடிச்சாலை ஒன்று இங்கு உண்டு. இங்கு நூற்றுக்கணக்கான சமயநூல்கள் உள்ளன.

## பயிற்சிகள்

1. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் எங்கே அமைந்துள்ளது?
2. மாவிட்டபுரம் எனப் பெயர் வரக் காரணம் யாது?
3. இவ்வாலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் யாது?
4. மகோற்சவம் எப்போது நடைபெறும்?
5. இவ்வாலயத்தில் நடைபெறும் வேறு விழாக்கள் எவை?

**சரி (✓) பிழை (✗) இடுக.**

01. மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் திருகோணமலையில் அமைந்துள்ளது. ( )
02. குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் எனும் பெயர் ஏற்பட்டது.( )
03. இவ்வாலயத்தின் விருட்சம் ஆலமரமாகும். ( )
04. 25 நாட்கள் இங்கே திருவிழாக்கள் நடைபெறும் ( )
05. சூரன்போர் விமர்சையாக இவ்வாலயத்தில் கொண்டாடப்படும். ( )

## பாடச்சுருக்கம்

★ யாழ்ப்பாண நகரில் இருந்து காங்கேசன் துறை செல்லும் நெடுஞ் சாலையில் 15 கிலோமீற்றர் தூரத்தில் மாவிட்டபுரம் அமைந்துள்ளது.

★ மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகத்தை குமரிமுகமாக மாற்றிய ஆலயம் இதுவாகும்.

★ குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்பட்டது.

★ பூர்வ பக்ஷ சஷ்டித்திதியோடு ஆனி உத்தர நாளன்று மாகோற்சவம் ஆரம்பமாகி 25 நாட்கள் நடைபெறும்.

★ இவ்வாலயத்தில் சூரன்போர், கந்தசஷ்டி பூசை என்பன விமர்சையாக கொண்டாடப்படும்.